# பரீட்சகரின் அறிக்கை

## மட்டம் II பரீட்சை - 2024 யூலை

## (201) உயர் நிதிக் கணக்கீடும் கிரயவியலும்

## பகுதி A

### வினா இல. 01

இந்த வினாவுக்கு ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 25, இது 10 உப வினாக்களை உள்ளடக்கியுள்ளது. இதில் 5 வினாக்களுக்கு குறுகிய விடை எழுதுமாறு கேட்கப்பட்டிருந்தது. இங்கு பாடத்திட்டத்திலுள்ள உயர் நிதிக் கணக்கீடும் கிரயவியலும் என்ற பாடப்பரப்பிலுள்ள பரீட்சார்த்திகளின் அறிவு பரீட்சிக்கப்பட்டிருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளித்திருந்ததுடன் மிகச் சில பரீட்சார்த்திகளால் மாத்திரமே முழுப் புள்ளிகளையும் பெற முடிந்தது.

விடைகளிலிருந்து கீழ்வரும் பொதுவான பலவீனங்களும் தவறுகளும் அவதானிக்கப்பட்டன:

**1.1** இவ்வினா தொக்கு மதிப்பீடு தொடர்பான பரீட்சார்த்திகளின் அறிவைப் பரீட்சித்திருந்ததுடன் அதிகளவான பரீட்சார்த்திகள் 4.8 மில்லியன் என்ற சரியான விடையை அளித்திருந்தனர். சில பரீட்சார்த்திகள் பாடப்பரப்பில் உள்ள கோட்பாடுகளைச் சரியாகப் புரிந்துகொள்ளாமையால் சரியான விடையை இனங்கண்டிருக்கவில்லை.

**1.2** இவ்வினா கிரயக் கணக்கீடு தொடர்பான அறிவைப் பரீட்சித்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் கிரயக் கணக்கீடு தொடர்பாகத் தரப்பட்ட கூற்றினை இனங்கண்டு, சரியாக விடை அளித்திருந்தனர். அதே வேளை ஒரு சிலர் மாத்திரம் அடிப்படை கிரயக் கணக்கீட்டுக் கோட்பாடுகளைச் சரியாக விளங்கிக் கொள்ளாததால் சரியான விடை அளித்திருக்கவில்லை.

**1.3** இவ்வினா 1890 ஆம் ஆண்டின் பங்குடமை கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகள் தொடர்பில் பரீட்சார்த்திகளின் அறிவைப் பரீட்சித்திருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் சரியான விடையை அளித்திருந்தனர்.

**1.4** இது கிரயக் கணக்கீடு தொடர்பான சரியான கூற்றைத் தெரிவு செய்யுமாறு பரீட்சார்த்திகளைக் கோரியது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியாக விடையளித்திருந்தனர் எனினும் சில பரீட்சார்த்திகளால் ஒதுக்கப்பட்ட புள்ளிகளைப் பெற முடியவில்லை.

**1.5** இது கணக்கீட்டு எண்ணக்கரு பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்ததுடன் அட்டுறு எண்ணக்கருவைப் பிரயோகிப்பதன் மூலம் 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சரியான வாடகை வருமானத்தை கணிப்பிடுமாறு கேட்டிருந்தது. ஒரு குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகளால் சரியான வாடகை வருமானத்தை கணிப்பதற்கு முடியாமற் போயிருந்தது.

**1.6** இங்கு LKAS 10 இற்கு இணங்க, அறிக்கையிடல் காலப்பகுதிக்குப் பின்னரான சீராக்கமற்ற நிகழ்வுகளை இனங்காணுமாறு கேட்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் பங்கிலாப முன்மொழிவு, முதலீடுகளின் சந்தைப் பெறுமதியில் ஏற்படும் வீழ்ச்சி போன்ற விடயங்களை வழங்கியதன் மூலம் முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். சில பரீட்சார்த்திகள் சரியாக விடையளிப்பதில் சிரமங்களை எதிர்கொண்டிருந்தனர்.

**1.7** இங்கு சிக்கனக் கட்டளைக் கணியச் (EOQ) சூத்திரத்தின் மூன்று எடுகோள்கள் கேட்கப்பட்டிருந்தன. அதிகளவான பரீட்சார்த்திகள் சரியாக விடையளித்திருந்தனர். சில பரீட்சார்த்திகள் தவறாக, EOQ சூத்திரத்தை மாத்திரம் எழுதியிருந்தனர்.

**1.8** இங்கு X, Y இன் அர்ப்பணிப்பு விகிதத்தைக் கணிப்பிடுமாறு கேட்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் சரியான விகிதத்தை வெற்றிகரமாக வழங்கியிருந்தனர். சில பரீட்சார்த்திகள் கணித பாடத்தில் போதிய அறிவோ திறன்களோ இல்லாததால் அர்ப்பணிப்பு விகிதத்தைக் கணிப்பிட சிரமப்பட்டிருந்தனர்.

**1.9** இங்கு தரப்பட்ட விவரணத்தின் அடிப்படையில் தனியார் கம்பனி ஒன்றினால் செலுத்தப்பட வேண்டிய நிகர சம்பளத்தைக் கணிப்பிடுமாறு பரீட்சார்த்திகள் கேட்கப்பட்டிருந்தனர். இது அடிப்படையான மற்றும் நேரடியான கணக்கீடு தொடர்பான கணிப்பீட்டு வினாவாக இருந்ததால் அதிகளவான மாணவர்கள் முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். எவ்வாறாயினும், மிகச் சில பரீட்சார்த்திகள் EPF கழிப்பனவுக்கான கணிப்பீட்டைப் பிழையாகச் செய்திருந்ததால் செலுத்தப்பட வேண்டிய நிகர சம்பளத்தைக் கணிப்பிட முடியாமலிருந்தனர்.

**1.10** இவ்வினா பொருள் உற்பத்தி நிறுவனம் ஒன்றின் குறிப்பிட்ட ஊழியர் ஒருவரின் மொத்த சம்பாத்தியத்தைக் கணிப்பிடுமாறு கேட்டிருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் மொத்த சம்பாத்தியத்தைக் கணிப்பிட்டிருந்ததுடன் சில பரீட்சார்த்திகள் தரப்பட்ட தகவலைச் சரியாகப் புரிந்து கொள்ளாததால் முழுப் புள்ளிகளையும் பெற்றிருக்கவில்லை.

**இந்த வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.**

## பகுதி B

**வினா இல. 02**

இவ்வினா தனியுடமை வியாபாரம் ஒன்றின் 2023 ஏப்ரல் 01 இல் மூலதன (உரிமையாண்மை) மீதியையும் 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிகர இலாபத்தையும் தயாரிப்பதைப் பரீட்சித்திருந்தது. சில பரீட்சார்த்திகள் உரிமையாண்மை மீதியைச் சரியாகக் கணிப்பிடவில்லை என்பதுடன் கீழ்வரும் பலவீனங்களையும் அவதானிக்க முடிந்தது :

(1) காசேட்டைத் தயாரிக்க கணிசமானளவு நேரம் செலவிடப்பட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது.

(2) உரிமையாண்மை மீதியின் கணிப்பீட்டின்போது ரூபா 9,000,000/- (தேய்மானத்தின் பின்) பெறுமதியான வாகனம் கவனத்திற் கொள்ளப்படவில்லை.

(3) எரிபொருள் கொள்வனவு தொடர்பான கணிப்பீடு சரியாக மேற்கொள்ளப்படாததால் விற்பனைக் கிரயம் தவறாகக் கணிப்பிடப்பட்டிருந்தது.

(4) P&L தொடர்பான பதிவுகள் வியாபாரக் கணக்கிற்கு எடுக்கப்பட்டிருந்தது.

(5) தேய்மானக் கணிப்பீடு சரியாக மேற்கொள்ளப்படவில்லை.

**இந்த வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.**

**வினா இல. 03**

இவ்வினா பங்காளர்களின் நடைமுறைக் கணக்குகள் மற்றும் மூலதனக் கணக்குகளை எவ்வாறு தயாரிப்பது என்பது பற்றிய அடிப்படை அறிவைப் பரீட்சித்திருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு நன்றாக விடை அளித்திருந்தனர்.

சில பரீட்சார்த்திகள் கீழ்வரும் காரணங்களால் நன்றாக விடை அளித்திருக்கவில்லை:

(1) **மாயாவுக்கான** சகல நிலுவைகளும் தனித்தனியாகக் காட்டப்படவில்லை.

(2) நன்மதிப்புச் சீராக்கம் சரியாக மேற்கொள்ளப்படவில்லை என்பதுடன் பதிவுகளும் நடைமுறைக் கணக்கிற்கு மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(3) நடைமுறைக் கணக்குகளின் ஆரம்ப மீதிகள் பக்கம் மாறிக் குறிப்பிடப்பட்டிருந்தன.

(4) சில பரீட்சார்த்திகள் நடைமுறைக் கணக்குகளுக்குப் பதிலாக மூலதனக் கணக்குகளில் பரிவர்த்தனைகளைப் பதிவு செய்திருந்தனர்.

**இந்த வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது..**

**வினா இல. 04**

இவ்வினா இலாப நோக்கற்ற நிறுவனம் ஒன்றின் அங்கத்தவர்களின் சந்தாக் கணக்கு மற்றும் வருமான, செலவினக் கணக்கு ஆகியவற்றைத் தயாரிப்பதைக் கேட்டிருந்தது.

அவதானிக்கப்பட்ட பொதுவான தவறுகள் கீழ்வருமாறு :

(1) சில பரீட்சார்த்திகளால் வருமான, செலவினக் கணக்கு சரியாகத் தயாரிக்கப்படவில்லை.

(2) சில பரீட்சார்த்திகளால் ஆண்டிற்கான தேய்மானம் சரியாகக் கணிப்பிடப்படாததுடன் வருமான, செலவினக் கணக்கிற்கும் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

(3) அங்கத்தவர்களின் சந்தாக் கணக்குடன் தொடர்புடைய வரவு மற்றும் செலவுப் பதிவுகள் சில பரீட்சார்த்திகளால் சரியாகப் பதிவு செய்யப்படவில்லை.

(4) 2024 ஆம் ஆண்டில் பெறப்பட்ட அங்கத்துவக் கட்டணங்கள் சில பரீட்சார்த்திகளால் அந்த ஆண்டிற்கான அங்கத்துவக் கட்டணங்களாகக் கணக்கிற் கொள்ளப்பட்டிருந்தன.

**இந்த வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.**

**வினா இல. 05**

**(A)** இங்கு தரப்பட்ட தகவல்களின் அடிப்படையில் **பணி இல. 102** தொடர்பில் விதிக்கப்பட வேண்டிய விலையைக் கணிப்பிடுமாறு கேட்கப்பட்டது. விதிக்கப்பட வேண்டிய விலையானது உற்பத்திக் கிரயத்தின் மீது கம்பனியின் இலாப எல்லையான 25% ஆகும். ஒரு சில பரீட்சார்த்திகள் இதனைச் சரியாகச் செய்யவில்லை.

**(B)** தரப்பட்ட தரவுகளின் அடிப்படையில், ஒவ்வொரு உற்பத்திப் பிரிவுகளுக்குமான ஒதுக்கீடு மற்றும் பகிர்வுக் கூற்றினைத் தயாரிக்குமாறு கேட்கப்பட்டது. மிகச் சில பரீட்சார்த்திகள் நன்றாக விடையளித்திருக்கவில்லை. மேலும், மேந்தலை ஒதுக்கீடுகளின் அடிப்படையை சில பரீட்சார்த்திகள் காட்டியிருக்காமையை அவதானிக்க முடிந்தது.

**இந்த வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.**

**வினா இல. 06**

**(A)** தரப்பட்ட தரவுகளின் அடிப்படையில், சிக்கனக் கட்டளைக் கணியம் (EOQ), மறு கட்டளை மட்டம் மற்றும் உயர்ந்தபட்ச இருப்பு மட்டம் ஆகியவற்றைக் கணிப்பிடுமாறு கேட்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் EOQ ஐக் கணிப்பிட்டிருந்ததுடன் சில பரீட்சார்த்திகள் வினாவுக்கு விடையளித்திருக்கவில்லை. சொற்பளவான பரீட்சார்த்திகள் EOQ சூத்திரத்தில் பெறுமானங்களை பிழையாகப் பிரதியிட்டிருந்தனர். சில பரீட்சார்த்திகள் மறு கட்டளை மட்டத்திற்கான சூத்திரம் மற்றும் உயர்ந்தபட்ச இருப்பு மட்டத்திற்கான சூத்திரம் ஆகியவற்றில் தரவுகளைத் தவறாகப் பிரதியிட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது. பரீட்சார்த்திகளின் இத்தகைய பலவீனங்களுக்கான தீர்வாக, அவர்கள் கணக்கீடு மற்றும் கிரயவியலுடன் தொடர்புடைய கோட்பாட்டு அறிவை மேம்படுத்துதல் வேண்டும்.

**(B)** தரப்பட்ட தரவுகளின் அடிப்படையில், FIFO முறையின் கீழ் மூலப்பொருள் ”X” இற்கான களஞ்சியப் பேரேட்டைத் தயாரிக்குமாறு கேட்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு நன்றாக விடை அளித்திருந்தனர். ஒரு சில பரீட்சார்த்திகள் FIFO முறை பற்றிய விளக்கம் இன்மையால் வழங்கப்பட்ட கணியத்தின் விலையைச் சரியாக எடுத்திருக்கவில்லை. மேலும், ஒரு சில பரீட்சார்த்திகள் களஞ்சியப் பேரேட்டைத் தயாரிக்க முனையவில்லை என்பதை அவதானிக்கக்டியதாக இருந்தது.

**இந்த வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.**

## பகுதி C

**வினா இல. 07**

இவ்வினா வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி ஒன்றின் நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதைப் பரீட்சித்திருந்ததுடன் அது **(a), (b)** என இரண்டு பகுதிகளைக் கொண்டிருந்தது. **பகுதி (a)** ஆனது முற்றடக்க வருமானக் கூற்றைத் தயாரிப்பதைப் பரீட்சித்திருந்ததுடன், **பகுதி (b)** ஆனது நிதி நிலைக் கூற்றைத் தயாரிப்பதைப் பரீட்சித்திருந்தது.

அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளித்திருந்ததுடன் சில பரீட்சார்த்திகளால் முழுமையாகப் புள்ளிகளைப் பெறவும் முடிந்திருந்தது.

கீழ்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன:

**(a) முற்றடக்க வருமானக் கூற்றின் தயாரிப்பு :**

(1) முற்றடக்க வருமானக் கூற்றிற்காக பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட வடிவத்தை மிகச் சில பரீட்சார்த்திகள் பின்பற்றியிருக்கவில்லை.

(2) சில பரீட்சார்த்திகளால் வருமான வரிச் சீராக்கம் சரியாக மேற்கொள்ளப்படவில்லை.

(3) சில பரீட்சார்த்திகளால் இயந்திர விற்பனைக்கான கணக்கீட்டுப் பதிவுகள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை என்பதுடன் இதனால், இயந்திர விற்பனை மீதான சரியான இலாபம் சில பரீட்சார்த்திகளால் கணக்கிற் கொள்ளப்படவில்லை.

(4) ஒரு சில பரீட்சார்த்திகளால் விற்பனைத் தரகு மற்றும் செலுத்தப்பட்ட இடைக்காலப் பங்கிலாபம் ஆகியன வருமானமாகக் கணக்குகளில் காட்டப்பட்டிருந்தன.

(5) சில பரீட்சார்த்திகளால் வியாபார வருமதிகளுக்கான சரியான விடுதொகை கணக்கிற் கொள்ளப்படவில்லை.

(6) சில பரீட்சார்த்திகள் செய்முறைகளை இணைக்கவில்லை என்பதுடன் இதனால் செய்முறை களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள சில மேலதிக புள்ளிகளை அவர்களால் பெற முடியவில்லை.

(7) சில பரீட்சார்த்திகளால் முற்பணமாகச் செலுத்திய அலுவலக வாடகை கவனத்திற் கொள்ளப்படவில்லை.

**(b) நிதி நிலைக் கூற்றின் தயாரிப்பு:**

(1) சில பரீட்சார்த்திகள் வியாபார வருமதிகளில் இருந்து அறவிட முடியாக் கடனுக்கான ஏற்பாட்டைக் கழித்திருக்கவில்லை.

(2) நடைமுறை மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்கள் மற்றும் பரிப்புக்கள் சரியானவாறு வகைப்படுத்தப்படவில்லை.

(3) மிகச் சில பரீட்சார்த்திகள் நிதி நிலைக் கூற்றிற்காக பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட வடிவத்தைப் பயன்படுத்தவில்லை.

(4) சில பரீட்சார்த்திகள் சாதாரண பங்குகளின் உரிமை வழங்கலை கணக்குகளில் பதிவு செய்யத் தவறியிருந்தனர்.

(5) சில பரீட்சார்த்திகளால் இயந்திரம் மற்றும் மோட்டார் வாகனங்களின் திரண்ட தேய்மானம் சரியாகக் கணக்கிற் கொள்ளப்படவில்லை.

(6) செலுத்திய இடைக்காலப் பங்கிலாபம் கணக்குகளில் சரியாகப் பதியப்படவில்லை.

(7) சில பரீட்சார்த்திகளால் செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணங்கள் மற்றும் செலுத்த வேண்டிய வருமான வரி ஆகியன கணக்குகளில் காட்டப்படவில்லை.

**இந்த வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது..**

- - - -

**<u>பரீட்சையில் செயலாற்றுகையை மேம்படுத்தும் பொருட்டு பரீட்சார்த்திகளின் ஆற்றல் மட்டத்தை மேம்படுத்துவதற்கான பரிந்துரைகள்</u> :**

**(1)** பரீட்சார்த்திகள் பாடப்புத்தகத்தை நன்கு படித்து அதன் உள்ளடக்கங்களைப் புரிந்து கொள்ளுதல் வேண்டும்.

**(2)** செயல் வினைச் சொற்களின் வரைவிலக்கணத்தை விளங்கிக்கொண்டு, வினாத்தாளின் இறுதியில் தரப்பட்டுள்ள செயல் வினைச்சொல் செவ்வை நிரலின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளிக்க பயிற்சி செய்தல் வேண்டும்.

**(3)** கடந்தகால வினாத்தாள்களின் உள்ளடக்கங்களைப் படித்து, குறைந்தது 2 – 3 பரீட்சை வினாத்தாள்களைப் பயிற்சி செய்து, வினாக்கள் எந்த அடிப்படையில் தயாரிக்கப்படுகின்றன என்பதை விளங்கிக்கொள்ள முயற்சி செய்தல் வேண்டும்.

**(4)** பரீட்சார்த்திகள் பரீட்சை எழுதுவதற்கு முன்னர், கடந்தகால வினாத்தாள்களை உரிய நேரத்தில் செய்து முடித்து பயிற்சி பெற வேண்டும். இது பரீட்சையில் நேர முகாமைத்துவத்தை மேம்படுத்த உதவும்.

**(5)** பரீட்சார்த்திகள் பரீட்சையை தெளிவான கையெழுத்தில் எழுதுதல் வேண்டும்.

**(6)** பரீட்சார்த்திகள் வினாத்தாளுக்கு விடையளிக்க ஆரம்பிப்பதற்கு முன்னர், பரீட்சை வினாத்தாளில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும்.

**(7)** வினாவை விளங்கிக் கொள்வதற்காகவும் வினாத்தாளில் உள்ள வினாக்களுக்கு பொருத்தமானதும் துல்லியமானதுமான விடைகளை வழங்குவதற்காகவும் பரீட்சார்த்திகள் பரீட்சையின்போது தெளிவான, சமநிலையான மனநிலையில் இருத்தல் வேண்டும்.

**(8)** பரீட்சார்த்திகள் தரப்பட்ட புள்ளிகளின் அடிப்படையிலேயே வினாக்களுக்கான நேரத்தை ஒதுக்குதல் வேண்டும். இதன் மூலம் வினாத்தாளில் தரப்பட்ட அனைத்து வினாக்களுக்கும் வினைத்திறனான முறையில் பரீட்சார்த்திகளால் விடையளிக்கக்கூடியதாக இருக்கும்.

**(9)** விடைத்தாள்களைக் கையளிப்பதற்கு முன்னர், தேவைப்படுத்தப்பட்ட அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கப்பட்டுள்ளதா என்பதையும் பொருத்தமானவாறு இலக்கங்கள் இடப்பட்டுள்ளனவா என்பதையும் ஒருமுறைக்கு இருமுறை பரீட்சித்துக்கொள்ள வேண்டும்.

- * * * -